தளராத துணிவோடு களமாடினாய்..
இன்று தமிழீழ நினைவோடு படகேறினாய்..
அழகான திருமேனி தணலானதோ
இந்தி அதிகாரம் உனக்கிங்கு எமனானதோ..
இந்தி அதிகாரம் உனக்கிங்கு எமனானதோ..

தளராத துணிவோடு களமாடினாய்
இன்று தமிழீழ நினைவோடு படகேறினாய்
அழகான திருமேனி தணலானதோ
இந்தி அதிகாரம் உனக்கிங்கு எமனானதோ..
நீ நடந்த பாதையெங்கும் பூமலர்ந்தது
தமிழீழமெங்கும் உந்தனது பேர் கலந்தது
நீ நடந்த பாதையெங்கும் பூமலர்ந்தது
தமிழீழமெங்கும் உந்தனது பேர் கலந்தது
தாயகத்துப் போர்க்களத்தில் நீமுழங்கினாய்
தாயகத்துப் போர்க்களத்தில் நீமுழங்கினாய்
தம்பி தானையிலே தளபதியை நீவிளங்கினாய்
தம்பி தானையிலே தளபதியை நீவிளங்கினாய்
தளராத துணிவோடு களமாடினாய்..
இன்று தமிழீழ நினைவோடு படகேறினாய்..

அமைதி தேடி வந்த புறா சிறகிழந்தது
கொடும் அரக்கர்களின் அம்புபட்டு
துடிதுடித்தது..
அமைதி தேடி வந்த புறா சிறகிழந்தது
கொடும் அரக்கர்களின் அம்புபட்டு
துடிதுடித்தது..

இமையநாடு உந்தனுக்கு குழிபறித்தது
இமையநாடு உந்தனுக்கு குழிபறித்தது
உன்னை இழந்ததினால் எங்கள் நெஞ்சு
பதைபதைக்குது..
உன்னை இழந்ததினால் எங்கள் நெஞ்சு
பதைபதைக்குது..
தளராத துணிவோடு களமாடினாய்..

இன்று தமிழீழ நினைவோடு படகேறினாய்..

சிங்களத்து படைகளோடு போராடினாய்
வந்த இந்தியர்களோடும் அன்று வாதாடினாய்
சிங்களத்து படைகளோடு போராடினாய்
வந்த இந்தியர்களோடும் அன்று வாதாடினாய்
பொங்குகின்ற புலிகளுக்கு வழிகாட்டினாய்
பொங்குகின்ற புலிகளுக்கு வழிகாட்டினாய்
இன்றுபுயல்படுத்த மாதிரியாய்விழிமூடினாய்
இன்றுபுயல்படுத்த மாதிரியாய்விழிமூடினாய்
தளராத துணிவோடு களமாடினாய்..

இன்று தமிழீழ நினைவோடு படகேறினாய்..

பாசத்தோடு ஈழமக்கள் நெஞ்சை ஆளுவாய்
பிரபாகரனின் தம்பியாகி என்றும் வாழுவாய்
பாசத்தோடு ஈழமக்கள் நெஞ்சை ஆளுவாய்
பிரபாகரனின் தம்பியாகி என்றும் வாழுவாய்
ஆசையோடு தேசம் காண வந்த வீரனே
ஆசையோடு தேசம் காண வந்த வீரனே

கிட்டு அண்ணன் என்ற பெயரெடுத்த
எங்கள் தேவனே
கிட்டு அண்ணன் என்ற பெயரெடுத்த
எங்கள் தேவனே
தளராத துணிவோடு களமாடினாய்..
இன்று தமிழீழ நினைவோடு படகேறினாய்..
அழகான திருமேனி தணலானதோ

இந்தி... அதிகாரம்.. உனக்கிங்கு எமனானதோ.